(ஒன்பதாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(6).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 செப்தெம்பர் 22 செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது

## 2020 ஒக்டோபர் 06, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

128/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் மன்னார் பிரதேசத்திற்குரிய தாழ்வுபாடு பிரதேசத்தில் அமைந்திருந்த கலாசார நிலையமானது யுத்தம் நிகழ்ந்த காலப்பகுதியில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் பயன்பாட்டிலிருந்தபோது சேதமடைந்ததன் காரணமாக 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூலம் மேற்படி சேதமடைந்த கலாசார நிலையத்திற்குப் பதிலாக புதிய கலாசார நிலையமொன்றை அமைப்பதற்காக 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்காக அப்போதைய கலாசார அமைச்சின் செயலாளர் உட்பட அத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நேரடியாக குறித்த பிரதேசத்திற்குச் சென்று அதற்காகத் தேவைப்படும் காணித் துண்டொன்றை இனங்கண்டு அப்போதைய கலாசார அமைச்சிற்கு அக்காணியின் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், இப்புதிய கலாசார நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

184/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) யாழ்ப்பாண மாவட்டத்தில் தீவுக் கூட்டத்தில் எழுவைதீவு எனும் தீவொன்று இருப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி தீவில் காணப்படும் அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) எழுவைதீவிற்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான கடல் மார்க்க தூரம் எத்தனை கிலோமீற்றர்கள்;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) எழுவைதீவு எனும் பழைய தீவில் சரவணபவா கல்லூரியில் கல்விப் பொதுத் தராதர (சா.த.) பரீட்சைக்கு இறுதியாக மாணவர்கள் தோற்றிய வருடம் யாது;

(ii) மேற்குறிப்பிட்ட பாடசாலை மாணவர்கள் தற்போது மேற்குறிப்பிட்ட பரீட்சைக்கு தோற்றும் நிலையம் யாது;

(iii) கல்விப் பொதுத் தராதர (சா.த.) பரீட்சையை எழுவைதீவில் நடாத்துவதில் உள்ள தடை யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

251/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் முள்ளுத்தேங்காய் (Palm Oil) பயிர்ச்செய்கையில் ஈடுபடும் கம்பனிகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு கம்பனியினாலும் முள்ளுத்தேங்காய் பயிரிடப்படும் நிலத்தின் அளவு தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) முள்ளுத்தேங்காய் பயிரிடுவதற்கான அனுமதிப்பத்திரம் குறித்த கம்பனிகளிடம் காணப்படுகின்றனவா;

(ii) தற்போது பயிரிடப்படுகின்ற முள்ளுத்தேங்காய் பயிர்ச்செய்கைகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதையும் அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

346/2020

கௌரவ மயந்த திசாநாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019.11.16 முதல் இதுவரை முன்னாள் பிரதமர் கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு அரசாங்கத்தினால் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென பெறப்பட்டுள்ள அனுமதி யாது என்பதையும்;

(iii) அதற்கனெ இணைப்புச் செய்யப்பட்டுள்ள அமைச்சர் பாதுகாப்பு பிரிவின் அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) அதற்கென அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அவ்வாறானதொரு பாதுகாப்பு முன்னாள் பிரதமர்களுக்கும் வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

59/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை இலங்கை கிரிக்கெற் நிறுவனத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட —

(i) நிரந்தர;

(ii) அமய;

(ii) பதிலீட்டு;

ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் பெயர்கள் மற்றும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பதவிகள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பதவிக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவென்பதையும்;

அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இலங்கை கிரிக்கெற் நிறுவனத்திற்கு —

(i) ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்யும்;

(ii) சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்தும்;

நடைமுறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

101/2020

கௌரவ புத்திக பத்திறண,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் பெருமளவிலான தரிசு வயல் நிலங்கள் காணப்படுகின்றன என்பதையும்,

(ii) மேற்படி வயல் நிலங்களிற்கான நீரோட்டம் பலவீனமாகக் காணப்படுதல் மற்றும் நீரின் இரசாயனக் கலவை மாற்றமடைதல் என்பன அதற்குக் காரணமாக அமைந்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தில் காணப்படுகின்ற தரிசு வயற்காணிகளின் அளவு தொடர்பாக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த அளவானது ஏக்கர்களில் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வயற் காணிகளை பயனுள்ள பொருளாதார நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனின், அது எவ்வாறென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

162/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— நீர்வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திம்பிரகஸ்யாய பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள நீர் மற்றும் வடிகாலமைப்பு வசதிகள் இல்லாத வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு குடிமனை அலகிற்கும் மேற்குறிப்பிட்ட வசதிகளை வழங்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிப்பாரா?

(இ) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் எத்தகையது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

213/2020

கௌரவ மொகமட் முசம்மில்,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 ஆம் வருடம் முதல் 2019 வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள இரும்பு மற்றும் உருக்கின் அளவு;

(ii) இதற்காக செலவழிந்துள்ள நிதித்தொகை;

(iii) மேற்படி இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ள நாடுகள்;

(iv) மேற்படி இரும்பு மற்றும் உருக்கினை இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள்;

யாவை என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குறிப்பிட்ட காலகட்டத்தில் இலங்கைக்கு இரும்பு மற்றும் உருக்கினை இறக்குமதி செய்வதற்காக செலவழிந்துள்ள மொத்த நிதித்தொகை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2020 ஒக்டோபர் 07, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

111/2020

கௌரவ சாந்த பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) குறைந்த வருமானம் பெறுகின்ற குடும்பங்களில் இருந்து 5 ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2019 ஆம் ஆண்டில் 5 ஆந் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையந்து, உதவித் தொகை பெறும் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அப்பணத்தொகையிலிருந்து உரியவாறு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) 2020 ஆம் ஆண்டுக்காக உதவித்தொகை வழங்கும் பொருட்டு எவ்வளவு பணத் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) புலமைப் பரிசில் பெறுநர்களுக்கு உரிய காலப்பகுதியினுள் உதவித்தொகை வழங்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

129/2020

கௌரவ சார்ள்ஸ் நிர்மலநாதன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின், மன்னார் பிரதேச செயலகப் பிரிவிற்குரிய பள்ளிமுனை கிராமத்தில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு நடவடிக்கைகள், அப்போதைய மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கடந்த ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக அதன் பணிகள் நிறைவு செய்யப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு பணிகளை மேற்கொண்ட ஒப்பந்தக்காரரின் நீர் மற்றும் மின்சார இணைப்புகளுக்காக செலுத்தப்பட வேண்டிய அதிக நிலுவைத் தொகை காரணமாக மேற்படி இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டு மைதானத்தின் எஞ்சிய பணிகள் ஓராண்டுக்குள் ஆரம்பிக்கப்படுமென நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் பல தடவை தமக்கு வாக்குறுதி அளித்துள்ள போதிலும், இதுவரை குறித்த எஞ்சிய பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பள்ளிமுனை விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு பணிகளை துரிதமாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

252/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள ஹந்தானை தோட்டமானது மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தோட்டமொன்றாகும் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தோட்டத்திற்குச் சொந்தமாகவிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாவை;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) 2015 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட அல்லது மூடப்பட்ட பிரிவுகள் உள்ளனவா;

(iv) ஆமெனில், அப்பிரிவுகளின் நிலப்பரப்பு யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1992 முதல் 2015 வரையிலான காலப்பகுதியினுள் இந்த தோட்டத்திற்குச் சொந்தமான காணி தொழிற்சாலை மற்றும் ஏனைய கட்டடங்கள் வெளித்தரப்பினர்களுக்கு அல்லது தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த விபரங்கள் யாவை;

(iii) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட காணிக் கணக்கெடுப்பிற்கு அமைவாக இத்தோட்டத்திலே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களின் அளவு மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களின் அளவு யாவை;

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2020 ஒக்டோபர் 08, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

186/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவில் கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் எனும் பாடசாலையொன்று உள்ளதென்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தேசிய பாடசாலைகள் இரண்டில் ஒன்றான மேற்படி பாடசாலையின் கல்வி நிலை கீழ் மட்டத்தில் இருப்பதுடன் ஆசிரியர்கள்/ஊழியர்கள் வெற்றிடங்கள், தளபாடங்கள்/ கட்டடங்கள் பற்றாக்குறை மற்றும் வளப் பற்றாக்குறை உட்பட பல குறைபாடுகள் உள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இப்பாடசாலைக்குத் தேவையான கட்டடங்கள் மற்றும் தளபாடங்களைப் பெற்றுக் கொடுக்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) மேற்குறிப்பிட்ட வித்தியாலயத்தின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் உட்பட ஒட்டுமொத்த பணியாட்டொகுதியின் ஒவ்வொரு பதவியினதும் விபரங்கள் யாவையென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) மேற்குறிப்பிட்ட வித்தியாலயத்தில் சிற்றூழியர் பதவிக்கான வெற்றிடங்கள் 17 நிலவுகின்ற போதிலும் இதுவரை அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமைக்கான காரணங்கள் யாவையென்பதை அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்பாமல் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த முடியாதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

253/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) போஹில்வத்த தோட்டம் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய தோட்டமொன்றாகுமென்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தோட்டத்திற்குச் சொந்தமாகவிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாவை;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) 2015 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட அல்லது மூடப்பட்ட பிரிவுகள் உள்ளனவா;

(iv) ஆமெனில், அப்பிரிவுகளின் நிலப்பரப்பு யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1992 முதல் 2015 வரையிலான காலப்பகுதியினுள் இந்த தோட்டத்திற்குச் சொந்தமான காணி, தொழிற்சாலை மற்றும் ஏனைய கட்டடங்கள் வெளித்தரப்பினர்களுக்கு அல்லது தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த விபரங்கள் யாவை;

(iii) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட காணிக் கணக்கெடுப்பிற்கு அமைவாக இத்தோட்டத்திலே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களின் அளவு மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களின் அளவு யாவை;

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

418/2020

கௌரவ வருண லியனகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களனிவெளி புகையிரத பாதையின் பாதுகாக்கப்பட்ட பிரதேசமான அவிசாவளை தொடக்கம் ஒப்பநாயக்க வரையான பகுதியில், கடந்த ஐந்து தசாப்தங்களுக்குள் அங்கு வசிக்கும் மக்களுக்கு குத்தகை பத்திரம் அல்லது வேறேதேனும் சட்ட ரீதியான உரிமப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வெண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) அவ்வாறு குத்தகைப் பத்திரம் அல்லது வேறேதேனும் உரிமப்பத்திரம் கிடைக்கப் பெறாத குடியிருப்பாளர்கள் மற்றும் வியாபார நிலைய உரிமையாளர்களுக்கு குத்தகைப் பத்திரம் வழங்கக்கூடிய இயலுமை இருக்கின்றதா என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அவ்வாறில்லையெனில், அக்குடியிருப்பாளர்கள்/ வியாபார நிலைய உரிமையாளர்கள் —

(i) தமது பிள்ளைகளைப் பாடசாலைக்குச் சேர்க்கும்போது;

(ii) தமது வியாபார நடவடிக்கைகளுக்காக கடன்களைப் பெறும்போது;

(iii) இயற்கை அனர்த்தங்களின்போது நட்டஈடுகளைப் பெற்றுக்கொள்வதில்;

முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உரிய நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு பொறிமுறை ஒன்றைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கின்றாரா என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றோல், ஏன்?

423/2020

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) குருணாகல் – ஹபரண புகையிரதப் பாதையை நிர்மாணிப்பது தொடர்பான தற்போதைய நிலையை அவர் இச்சபையில் விளக்குவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்தில் பாதையை நிச்சயித்துக் கொள்வதற்காக மூன்று முறை அளவிடல் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

(ii) மூன்றாவது அளவிடலுக்கு அமைவாக இப்புகையிரதப் பாதையை நிர்மாணிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) அம்மூன்றாவது அளவிடலுக்கு அமைவாக தம்புள்ள அத்துபாரயாய கிராமத்தை அண்டியதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட புகையிரத நிலையம், முதலாவது அளவிடலின் போது முன்மொழியப்பட்ட புகையிரத நிலையத்தை விட நகரத்திலிருந்து அதிக தொலைவில் அமைந்துள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) மூன்றாவது அளவிடலுக்கு அமைவாக அத்துபாரயாய கிராமத்தை அண்டியதாக புகையிரத நிலையத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள காணியானது உயர் பொருளாதாரப் பெறுமதியைக் கொண்டதொன்றா;

(ii) இன்றேல், தற்போதைய சந்தைப்பெறுமதிக்கு ஏற்ற வகையில் இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படமா;

என்பதை இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

14/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களும் சில காலமாக சட்டவிரோதமான போதைப்பொருட்களை விநியோகிக்கும் மையமாக மாறியுள்ளதென்பதையும், பாடசாலை மாணவர்களையும் இளைஞர்களையும் இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுகின்ற மேற்படி விநியோக வலைப்பின்னல் தொடர்ந்தும் வலுவான முறையில் செயற்படுகின்றதென்பதையும் அவர் அறிவாரா?

(ஆ) கடந்த இரண்டு ஆண்டுகளில் இரத்தினபுரி மாவட்டத்தில் —

(i) மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத போதைப்பொருள் சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) போதைப்பொருட்களுடன் தொடர்புடைய தவறுகள் சார்ந்ததாக கைது செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கைப்பற்றப்பட்ட சட்டவிரோத போதைப்பொருட்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது இனங்காணப்பட்டுள்ள சட்டவிரோத போதைப்பொருட்கள் எனும் வகைக்குள் உள்ளடங்கும் போதைப்பொருட்களின் வகைளையும் அவை எந்த நாடுகளிலிருந்து இந்நாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றதோ அந்நாடுகளின் பெயர்ப்பட்டியலையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) மேற்படி சட்டவிரோத போதைப்பொருட்களை விற்பனை செய்யும் பேர் வழிகளை துரிதமாக சட்டத்தின் பிடியில் சிக்கவைத்து போதைப்பொருள் ஆபத்தை பிரதேசத்திலிருந்து இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

62/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மின்சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை மின்சார சபை பெற்றுள்ள இலாபம்/ நட்டம் வருட ரீதியில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் ஏதேனும் நட்டம் பெற்றிருப்பின அதன் பொருட்டு தாக்கம் ஏற்படுத்திய காரணிகள் யாவையென்பதையும்;

(iii) இலங்கை மின்சார சபையினை நிதி ரீதியாக வலுவூட்டுவதற்கு அமைச்சினால் எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

104/2020

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் காணப்படுகின்ற பல்கலைக்கழக கல்லூரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) பல்கலைக்கழக கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் போதுமான விரிவுரை மண்டப வசதிகள் இல்லையென்பதையும்;

(ii) விரிவுரையாளர்களின் பற்றாக்குறை காணப்படுகிறது என்பதையும்;

(iii) விடுதி வசதிகள் இல்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென ஒதுக்க எதிர்பார்த்துள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

165/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்லின மற்றும் பல மதங்களை பின்பற்றுகின்ற மக்கள் வாழ்கின்ற கொலொன்னாவ பிரதேசத்தில் இளைஞர் சமுதாயத்தையும் பாடசாலைக் கல்வி கற்கின்ற மாணவர்களையும் கலாசார, சமய மற்றும் நற்பண்புகள் நிறைந்த தலைமுறையினராக மாற்றும் நோக்கத்துடன் கொலொன்னாவ பிரதேச செயலகப் பிரிவில் கலாசார நிலையமொன்றை நிர்மாணிக்க வேண்டியது இன்றியமையாததும் பொருத்தமானதுமானதொரு விடயம் என்பதையும்;

(ii) மேற்படி கலாசார நிலையத்தை நிர்மாணிப்பதற்கு கடந்த காலத்தில் அப்போதைய உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது என்பதையும்;

(iii) அதற்குரிய நிதியம் ஒதுக்கப்பட்டிருந்ததென்பதையும்;

(iv) இருந்தபோதிலும் மேற்படி கருத்திட்டம் அதற்கு மேல் செயற்படுத்தப்படவில்லை;

என்பதையும் அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கலாசார நிலையத்தை நிர்மாணித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

206/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தின் கமத்தொழில் செயற்பாடுகளுக்குத் தேவையான நீரை விநியோகிக்கும் பிரதான நீர்ப்பாசன நீர்த்தேக்கமானது கட்டுக்கரை என்பதையும்;

(ii) இக்குளத்தின் கீழ் 162 நீரேந்துக் குளங்கள் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) இந்நீரேந்துக் குளங்களுக்கு 10 கால்வாய்கள் மூலம் நீர் விநியோகிக்கப்படுகின்றதென்பதையும்;

(iv) நீண்டகாலமாக இந்த 10 கால்வாய்களும் புனரமைப்புச் செய்யப்படாமையினால் குளங்களுக்கு விநியோகிக்கப்படும் நீர் விரயமாகின்றதென்பதையும்;

(v) இதன் காரணமாக குளத்திலுள்ள நீரை வயல்களுக்கு பெற்றுக்கொள்ள முடியாமையினால் பயிர்கள் அழிவடைகின்றன என்பதையும்;

(vi) நான் மேற்படி கால்வாயை புனரமைப்புச் செய்ய வேண்டுமென பாராளுமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து 5 கால்வாய் களை புனரமைப்புச் செய்வதற்கு 2019.06.06 ஆம் திகதி ரூபா 95,288,568.42 அப்போதைய அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டதென்பதையும்;

(vii) மேற்படி கால்வாய்களில் வேலைகள் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில் புதிய அரசாங்கம் பதவியேற்றமையால் வேலைகளை ஆரம்பிக்காது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், பயிர்ச்செய்கைகளை உரிய வகையில் மேற்கொள்வதற்கு வழிவகை செய்யும் மேற்படி கால்வாய்களின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

216/2020

கௌரவ மொகமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 தொடக்கம் 2019 வரை ஒவ்வொரு வருடத்திலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்துள்ள உழுந்தின் அளவு யாதென்பதையும்

(ii) அதற்காக செலவிடப்பட்டத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உழுந்து இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி உழுந்து இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

தனித்தனியாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி காலப்பகுதியினுள் இலங்கைக்கு உழுந்து இறக்குமதி செய்வதற்கு செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2020 ஒக்டோபர் 09, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

187/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவில் கிளி/ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் என்ற பெயரில் பாடசாலையொன்று இயங்குகின்றது என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகளில் இரண்டில் ஒன்றான மேற்படி பாடசாலையில் தரம் குறைவான கல்வி, ஆசிரியர்கள்/ஊழியர்கள் பற்றாக்குறை, தளபாடங்கள்/கட்டடங்கள் பற்றாக்குறை, வளப் பற்றாக்குறை உட்பட பல குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாடசாலைக்குத் தேவையான கட்டிடங்கள் மற்றும் தளபாடங்களை பெற்றுக்கொடுக்கும் திகதி யாதென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) மேற்படி வித்தியாலயத்தின் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசார் ஊழியர்கள் உட்பட மொத்தப் பணியாட்தொகுதியிலும் ஒவ்வொரு பதவிகளின் விபரங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இப்பாடசாலையில் கல்விசார் பணியாட்தொகுதியில் வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், இற்றைவரையில் இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்குநடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) குறித்த வெற்றிடங்களை நிரப்பாது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த முடியாதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

254/2020

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிரேட்வெலி தோட்டம், கண்டி மாவட்டத்தின் தெல் தோட்டை பிரதேச செயலகப் பிரவில் அமைந்துள்ள மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குரிய தோட்டம் என்பதனை அவர் அறிவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இத்தோட்டத்திற்குச் சொந்தமாகவிருந்த பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை யாவை;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை;

(iii) 2015 ஆம் ஆண்டில் கைவிடப்பட்ட அல்லது மூடப்பட்ட பிரிவுகள் உள்ளனவா;

(iv) ஆமெனில், அப்பிரிவுகளின் நிலப்பரப்பு யாது;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 1992 முதல் 2015 வரையிலான காலப்பகுதியினுள் இந்த தோட்டத்திற்குச் சொந்தமான காணி தொழிற்சாலை மற்றும் ஏனைய கட்டடங்கள் வெளித்தரப்பினர்களுக்கு அல்லது தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த விபரங்கள் யாவை;

(iii) இறுதியாக மேற்கொள்ளப்பட்ட காணிக் கணக்கெடுப்பிற்கு அமைவாக இத்தோட்டத்திலே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலங்களின் அளவு மற்றும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாத நிலங்களின் அளவு யாவை;

என்பதை வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

419/2020

கௌரவ வருண லியனகே,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் தோட்டங்களில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாது?

(ii) இவர்களுக்கு வீடுகளை அமைப்பதற்கான காணிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(iv) அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணியின் அளவு யாது;

(v) அவ்வாறாயின் காணிகள் வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் சார்ந்துள்ள தோட்டக் கம்பனிகளின் பெயர்கள் யாவை;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்கம் காணிகளற்ற தோட்டக் குடும்பங்களுக்கு காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை எத்தகைய நடவடிக்கைகள் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

190/2020

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையிலுள்ள கிரிக்கட் விளையாட்டு சங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் 25 கிரிக்கட் சங்கங்கள் உள்ளன என்பதையும்;

(ii) கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிரிக்கட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இற்றை வரையில் அனுமதி பெற்றுக்கொடுக்கப்படவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) கிளிநொச்சி மாவட்டத்திற்கு கிரிக்கட் சங்கமொன்றை நிறுவுவதற்கு இற்றை வரையில் அனுமதி பெற்றுக்கொடுக்காமைக்கு;

(ii) பதிவைக் கோரி கிளிநொச்சி மாவட்ட கிரிக்கட் சங்கம் பல சந்தர்ப்பங்களில் விண்ணப்பித்திருந்தும் இற்றை வரையில் பதிவு செய்யாமைக்கு;

காரணங்கள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) 2010 ஆம் ஆண்டின் பின்னர் கிளிநொச்சி மாவட்ட கிரிக்கட் சங்கத்திற்காக விளையாட்டு அமைச்சினால் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள உதவிகள் யாவை என்பதையும் அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

16/2020

கௌரவ ஹேஷா விதானகே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் தொழில்நுட்ப மட்டத்தைச் சேர்ந்த (PL வகுதி) அலுவலர்கள் 3/2016 இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக சம்பளம் பெறுகின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி PL வகுதியின் அலுவல்களுக்கு 3/2016 இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைவாக பதவியுயர்வு வழங்கப்படுவதற்கான நடைமுறையொன்று இருக்கின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதிகள், நடத்துனர்கள் மற்றும் தொழில்நுட்ப மட்டத்தைச் சார்ந்த (PL வகுதியின்) அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும் நிறைவேற்று மட்டத்தைச் சேர்ந்த அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இலங்கை போக்குவரத்து சபையின் அலுவலர்களுக்கு இப்பதவியுயர்வுகள் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி பதவியுயர்வு வழங்கப்படும் தரங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி பதவியுயர்வுகள் 3/2016 இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படுமா என்பதையும்;

(v) இல்லையெனில், பின்பற்றப்படும் நடைமுறை யாதென்பதையும்;

(vi) தற்போதுள்ள நிறைவேற்று அலுவலர்களுக்கு மேலதிகமாக 3/2016 இலக்கமுடைய பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படுகின்ற பதவியுயர்வுகளின் வாயிலாக ஒவ்வொரு டிப்போவிற்கும் புதிதாக நியமிக்கப்படுகின்ற நிறைவேற்று மட்டத்திலான அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

64/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்ட விரோத போதைப்பொருள் சுற்றிவளைப்புக்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டமைக்கு சனாதிபதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பொலிஸ் உத்தியோகத்தருக்கும் அது சார்பாக வழங்கப்பட்ட பரிசுத் தொகைகள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி சுற்றிவளைப்புக்களின் போது கைப்பற்றப்பட்ட போதைப்பொருள், போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபடுகின்றவர்களின் கைகளுக்குச் சென்றடையச் செய்தல் தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) அவர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் புலனாய்வுகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

106/2020

கௌரவ புத்திக பத்திறன,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கள்ளு உற்பத்திக் கைத்தொழில் வியாபித்துள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி கைத்தொழில் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள நபர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2019- 12- 31 ஆம் திகதியளவில் இலங்கையில் உரிமம் பெற்ற கள்ளு உற்பத்தியாளர்கள்/நிறுவனங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொர் உற்பத்தி ஆலைக்கும் ஏற்புடைய அங்கீகரிக்கப்பட்ட கொள்ளளவு வரையறை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அந்த அளவுகள் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் தனித்தனியாக யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) கள்ளு உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் நலனோம்புகைக்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை யாது என்பதையும்;

அவர் மேலும் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

167/2020

கௌரவ எஸ். எம். மரிக்கார்,— காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்மலானை பிரதேச செயலகப் பிரிவில் காணி உரித்துக்கள் அற்ற வீடுகளின் எண்ணிக்கை யாது?

(ii) மேற்படி வீடுகளிற்கு உரித்துக்களை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று இருக்கின்றதா;

(iii) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் என்ன;

என்பன பற்றி இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

207/2020

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள கல்வி அமைச்சின் கீழ் வரும் SLIATE நிறுவனத்தில் Higher National Diploma கற்கை நெறியை ஆரம்பித்து 03 வருடங்கள் கடந்த போதிலும், இது வரை தற்காலிகக் கட்டடம் ஒன்றிலே அந்நிறுவனம் இயங்குகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் காரணமாக, Information Technology, English, Tourism ஆகிய கற்கை நெறிகள் மாத்திரம் நடாத்தப்படுகின்றன என்பதையும்;

(ii) கற்கை நெறிக்கு அவசியமான ஆய்வுகூட வசதிகள் இல்லையென்பதையும்;

(iii) Accounting, Management ஆகிய கற்கை நெறிகளை ஆரம்பிக்க முடியாதுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) SLIATE நிறுவனத்திற்கு நிரந்தர கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு மன்னார் மாவட்ட செயலகத்தினால் மன்னார் பிரதேச செயலகப் பிரிவிற்குரிய உயிலங்குளம் பிரதேசத்தில் 05 ஏக்கர் அளவுடைய காணியொன்று அப்போதைய உயர் கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாகின்றது என்பதையும் அவர் அறிவாரா?

(ஈ) மன்னாரில் நிர்மாணிக்கப்படவுள்ள SLIATE நிறுவனத்தின் நிரந்தரக் கட்டடத்தை உலக வங்கியின் பங்களிப்புடன் ஆரம்பிப்பது தொடர்பிலான பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதுடன், நிரந்தரக் கட்டம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

218/2020

கௌரவ மொஹமட் முசம்மில்,— வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2015 முதல் 2019 வரையிலான ஒவ்வொரு ஆண்டிலும் —

(i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட கௌப்பியின் அளவு;

(ii) அதற்காக செலவு செய்யப்பட்ட பணத்தொகை;

(iii) எந்த நாடுகளில் இருந்து கௌப்பி இறக்குமதி செய்யப்பட்டது;

(iv) கௌப்பி இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்கள் யாவை;

என்பதையும் தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட காலப்பகுதியினுள் இலங்கைக்கு கௌப்பி இறக்குமதி செய்வதற்காக செலவிடப்பட்டுள்ள மொத்த தொகை எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?